**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 02.03.2026**

**OS.127/2024**

**வா.சா.1 திரு.மாது**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தில் உள்ள நிலம் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் R.கோபிநாதம்பட்டி பஞ்சாயத்து, ஜி.மூக்கனூர்பட்டி கிராமத்தில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண்.7/2, 7/2F இது கழனி நிலம் மற்றும் மேட்டு நிலம் சர்வே எண்.47/1A, 57/3A, 57/3B ஆகிய நிலங்கள். மொத்தம் எவ்வளவு நிலம் என்றால் 84 செண்ட் ஒன்றும், 1ஏக்கர் 21 1/2 செண்ட் நிலம். 84 செண்ட் நிலமானது எவ்வளவு விலைக்கு பேசப்பட்டது என்றால் 1 செண்ட் ரூ.33,000/-க்கு விலைபேசப்பட்டது. 1 ஏக்கர் 21 1/2 செண்ட் எவ்வளவு விலைபேசப்பட்டது என்றால் செண்ட் ரூ.20,000/- விலைபேசப்பட்டது. வியாபாரம் எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் அருள் வீட்டில் வைத்து பேசப்பட்டது. இந்த வியாபாரத்தை யார் யார் இருந்து பேசினோம் என்றால் நான், ராஜேந்திரன், ராமசந்திரன், சாமிகண்ணு, இன்னும் வெளியில் இருந்து 2, 3 பேர் வந்திருந்தார்கள். எந்த தேதியில் அவ்வாறு பேசப்பட்டது என்றால் தேதி சரியாக எனக்கு தெரியவில்லை, ஆனால் மாதம் 8ம் மாதம், வருடமும் எனக்கு நினைவில்லை.

2. இவ்வாறு பேசப்பட்டதற்கு ஏதாவது பத்திரம் எழுதப்பட்டதா என்றால் ஆமாம், அக்ரிமெண்ட் எழுதிக்கொண்டோம். அது எத்தனை ரூபாய் பத்திரம் என்றால் 100 ரூபாய் பத்திரம். அந்த பத்திரத்தை யார்வாங்கி வந்தது என்றால் எனது அக்கா மகன் ராமசந்திரன் வாங்கிவந்தார். அந்த பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் வியாபாரம் பேசிய அன்றே வாங்கினோம், ஆனால் வாங்கிய தேதி தெரியவில்லை. யார் பெயரில் பத்திரம் வாங்கப்பட்டது என்றால் சக்தி, மாது பெயரில் வாங்கப்பட்டது. அந்த பத்திரம் டைப்செய்யப்பட்டதா அல்லது கைப்பட எழுதப்பட்டதா என்றால் கைப்பட எழுதப்பட்டது. அந்த பத்திரத்தை எழுதியது யார் என்றால் சாமிகண்ணு என்பவர் எழுதினார், அவர் கர்த்தாங்குளத்தை சார்ந்தவர். சாமிகண்ணுவின் தந்தையார் பெயர் என்ன என்றால் மொட்டேரிக்கவுண்டர். சாமிகண்ணுவிற்கு பத்திரம் எழுத தகவல் சொன்னது யார் என்றால் நான்தான் தகவல் சொன்னேன்.

3. மொத்த நிலமும் எவ்வளவு தொகைக்கு விலைபேசப்பட்டது என்றால் இரண்டு நிலமும் சேர்ந்து ரூபாய் 50 இலட்சம்போல் வரும். தாவா ஒப்பந்த பத்திரத்தில் மொத்தசொத்தின் மதிப்பு எவ்வளவு என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான், சென்ட் கணக்கில்தான் எழுதப்பட்டது. பிரதிவாதிகள் நிலமும், என் நிலமும் ஒரேவரப்பு கொண்ட இணை நிலங்கள் என்றால் சரிதான். அக்ரிமெண்ட் போட்ட நிலத்தில் ஏற்கனவே 20 சென்ட் எங்களுடைய அனுபவத்தில் இருந்தது என்றால் அது அளந்தால்தான் தெரியும். நிலத்தை அளவீடு செய்யாமலேயே ஒப்பந்தம் போட்டோமா என்றால்

ஆமாம். நிலத்தை அளந்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலம் எவ்வளவு வருகிறதோ அந்த நிலத்திற்கு பணம் கொடுத்துவிடவேண்டியது என்றுதான் பேசினோம் என்றால் சரிதான். நிலத்தை அளந்து பார்த்தபோது பிரதிவாதிகள் அக்ரிமெண்ட் போட்ட நிலம் 20 சென்ட் என்னுடைய அனுபவத்தில்தான் இருந்தது என்றால் சரியல்ல, நிலத்தை அளந்து பார்க்கவேயில்லை. நான் 20 சென்ட் நிலம் என்னுடைய அனுபவத்தில் இருப்பதால் அதற்கு பணம் தரமுடியாது என்றுதான் சொன்னேன் என்றால் இல்லை, நிலத்தை அளக்கவே கிடையாது.

4. அக்ரிமெண்ட் மூலம் பணம் கட்டியதாக சொல்லியுள்ளேன் எவ்வளவு பணம் கட்டினேன் என்றால் மூன்றரை இலட்சம். அந்த பணம் யார் யாரிடம் கட்டினோம் என்றால் நானும், எனது தம்பி சக்தியும், அருள் மற்றும் அவரது மனைவி சத்யாவிடம் கட்டினோம். எவ்வளவுநாள் டைம் அக்ரிமெண்ட்டில் கொடுக்கப்பட்டது என்றால் 3 மாதம். அந்த 3 மாத காலத்திற்குள் யார் என்ன செய்யவேண்டும் என்றால் 3 மாதத்திற்குள் பாக்கி தொகையை கட்டிவிட்டு கிரையம் செய்துகொள்ளவேண்டியது என்று பேசப்பட்டது. அக்ரிமெண்ட் போட்ட 2, 3 நாளிலேயே பிரச்சனையா என்றால் ஆமாம். அந்த அக்ரிமெண்ட்டில் 3மாத காலத்திற்குள் நிலத்தை அளந்து அத்துகாட்டி பாக்கி தொகையை செலுத்தி கிரையம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அக்ரிமெண்ட் போட்ட 2, 3 நாட்களிலேயே பிரச்சனை செய்து நிலத்தை கொடுக்க மாட்டோம், அட்வான்ஸ் பணத்தையும் கொடுக்க மாட்டோம் என பிரச்சனை செய்தார்கள்.

5. நிலத்தை அளந்தால் என்னிடம் இருக்கும் 20 சென்ட் நிலத்திற்கும் பணம் கேட்பார்கள் என்பதால்தான் அக்ரிமெண்ட் போட்ட 2, 3 நாட்களிலேயே நான்தான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி அக்ரிமெண்ட்டில் சாட்சிகள் யார் என்றால் சாமிகண்ணு, ராமச்சந்திரன், ராஜேந்திரன் ஆகியோரும், வேறு சில நபர்களும் கையொப்பம் செய்துள்ளார்கள். அக்ரிமெண்ட் சாட்சி கையொப்பம் செய்துள்ளவர்கள் பெயரோ, அப்பா பெயரோ, அவர்கள் எந்த ஊரை சார்ந்தவர்கள் என்பது பற்றி குறிப்பாக எழுதவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தை எழுதியது யார் என்று குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. தாவா அக்ரிமெண்ட்டில் பிரதிவாதிகள் தரப்பில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் அருள், அவரது மனைவி சத்யா, அருளின் அம்மா தெய்வானை ஆகியோர் கையொப்பம் போட்டு கொடுத்தார்கள். அருள் மனைவி அந்த அக்ரிமெண்ட்டில் எந்த இடத்தில் கையொப்பம் போட்டுகொடுத்துள்ளார் என்றால் ஒப்பந்த பத்திரத்தில் 2ம் பக்கம், கீழ்வலதுபக்கம் 3ம் கையெழுத்தாக அவர் போட்டுள்ளார். அந்த அக்ரிமெண்ட்டில் முதல் பக்கத்தில் யார் யார் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சக்தி, அருள், அருளின்அம்மா தெய்வாணை ஆகியோர் போட்டுள்ளார், அருளின் மனைவி அதில் போடவில்லை. பணத்தை சத்யாவிடம் தான் கட்டினோமா என்றால் சத்யா, அருள் இருவரும்தான் வாங்கினார்கள். இது சம்மந்தமாக மொரப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால்சரிதான். யார் யார் புகார் கொடுத்தோம்என்றால்

நானும் எனது சகோதரர் சக்தியும் புகார் கொடுத்தோம். என்ன என்று புகார் கொடுத்தோம் என்றால் நிலத்திற்கு அக்ரிமெண்ட் போட்டோம், நிலத்தையும் கொடுக்க மறுக்கிறார்கள், பணத்தையும் கொடுக்க மறுக்கிறார்கள் என்றுதான் புகார் கொடுத்தோம். நாங்கள் மொரப்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், CSR நகல் கொடுத்துள்ளோம். பொது மனிதர்களிடம் நிலத்தையும் கொடுக்க மறுக்கிறார்கள், பணத்தையும் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொன்னோமா என்றால் சொன்னோம். அவ்வாறு யாரிடம் சொன்னோம் என்றால் வேலு, சாமிகண்ணு, ராமசந்திரன் ஆகியோருடன் சொன்னோம் அவர்களும் கேட்டார்கள், ஆனால் அவர்கள் பணத்தை கொடுக்க மறுத்தார்கள், நிலத்தையும் எழுதிகொடுக்க மறுத்தார்கள்.

7. எனது மகள் பெயர் மரகதம் என்றால் சரிதான். எனது மகள் மரகதம் என்பவரை வைத்து இந்நீதிமன்றத்தில் OS.100/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான் சொல்லி தாக்கல் செய்யவில்லை, எனது மகள் தனக்கு தெரியாமல் தடத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று கேஸ்போட்டுள்ளார். அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்துள்ள தடத்தை ரத்து செய்யவேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார் என்றால் அது பற்றி எல்லாம் தெரியாது. நான் சொல்லக்கூடிய ஒப்பந்த பத்திரம் தவறானது, நான், சாமிகண்ணு எல்லாம் சேர்ந்து தயாரித்துக்கொண்டது என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ளபடி பிரதிவாதிகள் பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள பணத்தை திருப்பி தரவேண்டும் என்ற பரிகாரம் தவறானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளபடி அக்ரிமெண்ட்டை அனுசரித்து நடந்துகொள்ளவில்லை அதனால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் தான் மீதி பணத்தை செலுத்தி கிரையம் செய்துகொள்ள தயாராக இல்லை, அதனால்தான் கிரையம் செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நோக்கமே 20 செண்ட் நிலத்திற்கு பணம் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.02 16:52:49 +0530